1118

1452

BHARATI

NEW METHOD READER

SECOND READER

20 FEB 1940

P. N. CHIDAMBARA MUDALIAR BROS.,
MADRAS. MADURA. TINNEVELLY Jn.

பாரதி

புதுமுறை வாசகம்

இரண்டாம் பாடம்

1481 1458
494.8186

நூலாசிரியர்:

அ. கி. பரந்தாமனார்,

தலைமைத் தமிழாசிரியர், திருப்பவுற் கலாசாலை,

வேப்பேரி, சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 FEB 1940
MADRAS

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்

மதராஸ் :: மதுரை :: திருநெல்வேலி ஜங்ஷன்

பதிப்புரிமை] 1939 [விலை அணா 4.

PRINTED AT THE V. R. PRESS, MADRAS—1939.

முகவுரை

நமது நாட்டுச் சிறுவர்கள் எளிதில் கற்குமாறு அரசாங்க பாடத் திட்டத்தைத் தழுவிப் புதுமுறையில் இவ்வாசக வரிசை நூல்கள் எழுதப்பட்டுள்ளன. இனிய கதைகளும் அறிவுதரும் பலவகைப் பாடங்களும் புது வகையான பாட்டுகளும் இவ் வரிசை நூல்களில் இடம் பெற்றுள்ளன. மேல் வகுப்பில் வரும்போது மாணவர்களிடம் காணும் குறைகளை மனத்தில் வைத்துக்கொண்டு அக்குறைகளை நீக்குதற்கு உரிய பயிற்சிகளை இங்குக் கொடுத்துள்ளேன். பயிற்சிகள் பேராசைப் பயிற்சிகளாயில்லாமல் கூடியமட்டும் மாணவ மாணவி நிலைக்கும் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர் நிலைக்கும் ஏற்றனவாய் இருக்கும். சிறுவர்கள் இவ்வரிசை நூல்களைப் பயின்றால் அவர்கள் தமிழ்மேல் அன்பும் தமிழறிவும் பொது அறிவும் பெறுவார்கள் என்பது திண்ணம்.

இந்நூல் வெளிவருதற்கு வேண்டிய உதவியளித்த பிரம சமாஜப் பள்ளிக்கூட ஆசிரியர் திரு. T. ஞான சுந்தரனார் அவர்களுக்கும், வித்வான் திரு. S. சங்கரலிங்க முதலியார் அவர்களுக்கும் என் நன்றி உரியதாகும்.

பள்ளிக்கூட அதிகாரிகளும் ஆசிரியர்களும் இவ் வரிசை நூல்களுக்கு ஆதரவு அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

தமிழகம்,
18, முத்துமுதலி தெரு,
புரசை, சென்னை.
12-11-1939.

இங்ஙனம்,
குழந்தைகளின் தொண்டன்:
அ. கி. பரந்தாமன்.

பொருள் அடக்கம்

பாட எண்			பக்கம்
	நிலா நிலா வா! வா!	....	1
	படங்களின் பெயர்கள்	....	3-6
1-11.	வாக்கியப் பாடங்கள்	....	7-32
12.	கோழியும் அதன் குஞ்சும்	....	33
13.	பள்ளிக்கூடம்	....	35
14.	நாயும் சிறுவனும்	....	36
15.	உழைத்தால் உணவு	....	39
16.	சேவல் பாட்டு	....	42
18.	அழுக்குப் புத்தகம்	....	44
19.	நிலாச் சாப்பாடு	....	47
20.	பேசக்கூடாது	....	48
21.	வண்டிகள்	....	50
22.	பறவைகள்	....	54
23.	மரங்கள்	....	57
24.	வீட்டு மிருகங்கள்	....	60
25.	முயற்சியில்லா முனியன்	....	63
26.	முயற்சிசெய்	....	66
27.	திசைகள்	....	67
28.	பொங்கற் பண்டிகை	....	70
29.	சீனுக் கடை	....	73
	பொதுக் கடவுள் வணக்கம்	....	77
	என் தாயே	....	78
	எங்கள் தோட்டம்	....	79
	சமயப் பாட்டு	....	80
	ஆத்திசூடி	....	81
	உலகநீதி	....	82

நிலா நிலா வா! வா!



நிலா, நிலா, வா! வா!
நில்லாமல் ஓடி வா!



மலை மேலே ஏறி வா!
மல்லிகைப் பூக்
கொண்டு வா!

நடுவீட்டில் வையே.
நல்ல துதி செய்யே.



வெள்ளிக் கிண்ணத்தில்
பால் சோறு,

வேண்டிய மட்டும்
உண்ணு.

அள்ளி அள்ளி எடு.

அப்பன் வாயில்
கொடு.

கொஞ்சிக் கொஞ்சி,
ஊட்டு.

குழந்தைக்குச் சிரிப்புக்
காட்டு.

நிலா! நிலா! வா! வா!

நில்லாமல் ஓடி வா!



(1) ________ (2) ________ (3) ________

(1) ________ (2) ________ (3) ________

குறிப்பு:—படங்களின் பெயர்களை எழுது.



குறிப்பு :—படங்களின் பெயர்களை எழுது.



குறிப்பு:—படங்களின் பெயர்களை எழுது.



குறிப்பு :—படங்களின் பெயர்களை எழுது.



பாடம் 1.

பூந் தோட்டம்

மல்லிகைக் கொடி

மண் தோண்டி

பூஞ் செடி

ரோஜாப் பூ

தாமரைக் குளம்

தாமரைப் பூ



பாடம் 2.

சிறு வீடு

மண் சுவர்

கை விளக்கு

கற் சட்டி

வெட்டுக் கத்தி

மரத் தட்டு

மூங்கிற் கூடை

தாழங் குடை

கூரை வீடு

தகரப் பெட்டி

மணல் தரை

வண்டி மாடு

அம்மிக் கல்

கல் யந்திரம்

ஊது குழாய்

நெய்க் கிண்ணம்

எண்ணெய் ஜாடி

மரக் கதவு

அகன்ற வீதி

பாடம் 3.

பையன்	பையன்கள்
பெண்	பெண்கள்
பழம்	பழங்கள்
நாற்காலி	நாற்காலிகள்
கட்டில்	கட்டில்கள்
கண்	கண்கள்
எலி	எலிகள்
பெட்டி	பெட்டிகள்
பலகை	பலகைகள்

பாடம் 4.

இவன் ராமன்.

அவன் பரதன்.

இவள் சீதை.

அவள் கமலம்.



இவர்கள் பிள்ளைகள்.

அவர்கள் பெண்கள்.



இது கிண்ணம்.

அது கரண்டி.





இவைகள்

நாற்காலிகள்.

அவைகள்

மேஜைகள்.



இவன்	இவள்	இவர்கள்	இது	இவை
அவன்	அவள்	அவர்கள்	அது	அவை

பயிற்சி

கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களைப் போடு.

1. ________ ராமன்.
2. ________ சீதை.
3. ________ கண்ணன்.
4. ________ பிள்ளைகள்.
5. ________ பெண்கள்.
6. ________ மாடு.
7. ________ தொப்பி.
8. ________ பலகை.
9. இவன் ________.
10. இவள் ________.
11. இவர் ________.
12. இவைகள் ________.
13. இது ________.
14. இவை ________.

பாடம் 5.

நான் நேற்றுப் பாடம்
எழுதினேன்.

நான் இன்று பாடம்
எழுதுகிறேன்.

நான் நாளைக்குப் பாடம்
எழுதுவேன்.

நாங்கள் நேற்றுக்
கணக்குப் போட்டோம்.

நாங்கள் இன்று கணக்குப்
போடுகிறோம்.

நாங்கள் நாளைக்குக்
கணக்குப் போடுவோம்.

சொற்கள்

நான்	நேற்று	எழுதினேன்	போட்டோம்
நாங்கள்	இன்று	எழுதுகிறேன்	போடுகிறோம்
கணக்கு	நாளை	எழுதுவேன்	போடுவோம்

பாடம் 6.

நான் நேற்றுப் பந்து விளையாடினேன்.

நீ நேற்று என்ன விளையாடினாய்?

நான் இன்று தூண் ஆட்டம் ஆடுகிறேன்.

நீ இன்று என்ன ஆட்டம் ஆடுகிறாய்?

நான் நாளைக்குப் பம்பரம் ஆடுவேன்.

நீ நாளைக்கு என்ன ஆட்டம் ஆடுவாய்?

நாங்கள் நேற்றுக் கால் - பந்து ஆடினோம்.

நீங்கள் நேற்று என்ன ஆட்டம் ஆடினீர்கள்?

நாங்கள் இன்று கண்ணும்பூச்சி ஆடுகிறோம்.

நீங்கள் இன்று என்ன ஆட்டம் ஆடுகிறீர்கள்?

நாங்கள் நாளைக்குப் பூனை - எலி ஆட்டம் ஆடுவோம்.

நீங்கள் நாளைக்கு என்ன ஆட்டம் ஆடுவீர்கள்?

சொற்கள்

விளையாடினேன்	ஆடுவேன்	ஆடுகிறோம்
விளையாடினாய்	ஆடுவாய்	ஆடுகிறீர்கள்
ஆடுகிறேன்	ஆடினோம்	ஆடுவோம்
ஆடுகிறாய்	ஆடினீர்கள்	ஆடுவீர்கள்

பாடம் 7.



இவன் நிலத்தை
உழுகிறான்.

இவன் விதை
விதைக்கிறான்.

இவர்கள் நாற்று
நடுகிறார்கள்.

இவர்கள்
நெற்கதிர்
அறுக்கிறார்கள்.

இவர்கள்
களத்தில்
நெல் தாள்
அடிக்கிறார்கள்.

இவர்கள்
மூட்டை
கட்டுகிறார்கள்.

17

சொற்கள்

உழுகிருன் நடுகிருர்கள் அடிக்கிருர்கள்
விதைக்கிருன் அறுக்கிருர்கள் கட்டுகிருர்கள்

பயிற்சி

(1) கீழ் வருபவைகளிலிருந்து ஏற்ற இரண்டு சொற்களைச் சேர்த்து வாக்கியங்கள் எழுது.

அவன்	அவள்	அது
செய்கிருன்	செய்கிருள்	செய்கிறது
ஆடுகிருன்	ஆடுகிருள்	ஆடுகிறது
ஓடுகிருன்	ஓடுகிருள்	ஓடுகிறது

(2)

நான்	நீ
செய்கிறேன்	செய்கிருய்
கட்டுகிறேன்	கட்டுகிருய்
நெய்கிறேன்	நெய்கிருய்
ஆடுகிறேன்	ஆடுகிருய்
ஓடுகிறேன்	ஓடுகிருய்
படிக்கிறேன்	படிக்கிருய்

(3) கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்கள் போட்டு எழுது.

அவன் பந்து ________.
அவள் ________ ________.
அவள் ஏழங்காய் ________.
அவள் ________ ________.
நீ பாடம் ________.
நீ ________ ________.
நான் வீடு ________.
நான் ________ ________.
அது புல் ________.
அது ________ ________.

பயிற்சி

கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களைப் போட்டு எழுது.

1. உழவன் என்ன செய்கிறான் ?
2. உழவன் ________ ________.
3. அவன் எதை விதைக்கிறான் ?
4. அவன் ________ ________.
5. அவர்கள் என்ன நடுகிறார்கள் ?
6. அவர்கள் ________ ________.
7. அவர்கள் எதை அறுக்கிறார்கள் ?
8. அவர்கள் ________ ________.
9. அவர்கள் களத்தில் என்ன செய்கிறார்கள் ?
10. அவர்கள் ________ ________ ________.
11. அவர்கள் எதை மூட்டை கட்டுகிறார்கள் ?
12. அவர்கள் ________ ________ ________.

பாடம் 8.

இவன் குயவன்.
இவன் பானையைச்
செய்கிறான்.

இவன் கொத்தன்.
இவன் வீட்டைக்
கட்டுகிறான்.



இவன் சேணியன்.
இவன் துணியை
நெய்கிறான்.

இவன் கருமான்.
இவன் கத்தியைச்
செய்கிறான்.

இவன் தச்சன்.
இவன் நாற்காலியைச்
செய்கிறான்.

பயிற்சி

கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களைப் போட்டு எழுது.

1. ———— எழுதுகிறேன்.
2. நீ பாடம் ————.
3. ———— பந்து போட்டோம்.
4. ———— எழுதுவாய்.
5. அவன் ————.
6. ———— கோலம் போட்டாள்.
7. நான் ———— ஆடுகிறேன்.
8. நீ ———— ஆடினாய்.
9. நாங்கள் நாளைக்கு ————.
10. இராமன் ———— எழுதுகிறான்.
11. கோமளம் ———— கட்டினாள்.
12. பெண்கள் பள்ளிக்கூடம் ————.
13. நீங்கள் கோலாட்டம் ————.



குறிப்பு :—ஒவ்வொரு படத்தைப்பற்றி ஒவ்வொரு வாக்கியம் எழுது.

பாடம் 9.



இது அகல் விளக்கு.

இதைக் குயவன் மண்ணால் செய்வான்.

இதற்கு விளக்கெண்ணெய் வேண்டும்.

இதில் வர்த்தி இருக்கும்.

அந்த வர்த்தி எரியும்.



இது குத்துவிளக்கு.

இதைக் கன்னான் பித்தளையால் செய்வான்.

பெண்கள் இதில் விளக்கெண்ணெய் ஊற்றி வர்த்தி போட்டு ஏற்றுவார்கள்.



இது குளோப் விளக்கு.

இது கண்ணாடியால் செய்யப்பட்டிருக்கும்.

இதுவும் விளக்கெண்ணெயால் எரியும்.



இது கை விளக்கு.
இது தகரத்தால் செய்யப்
படுகிறது.
இதற்கு மண்ணெண்ணெய்
வேண்டும்.
இதில் ஒரு வர்த்தி உண்டு.
அது எரியும்.



இது லாந்தர் விளக்கு.
இதனுள் விளக்கு ஒன்று
இருக்கும்.
அந்த விளக்கு காற்றில்
அணையாது.



இது சிம்னி விளக்கு.
சிம்னி கண்ணாடியால் செய்யப்
படுகிறது.
இந்த விளக்கிலிருந்து அதிக
வெளிச்சம் வரும்.
இதுவும் மண்ணெண்ணெயால்
எரியும்.



இது மெழுகு வர்த்தி.
இது மெழுகால் செய்யப்படும் விளக்கு.
இதில் ஒரு வர்த்தி உண்டு.
அது எரியும்.



இது பெட்ரோமாக்ஸ் விளக்கு.
இது மண்ணெண்ணெயால் எரியும்.
இதில் அபிரகத்தால் செய்யப் பட்ட சிம்னி உண்டு.
இது அதிக வெளிச்சம் தரும்.
இதன் விலை அதிகம்.
இது காற்றில் அணையாது.



இது மின்சார விளக்கு.

இது மின்சாரத்தால் எரியும்.

இது அதிக வெளிச்சம் தரும்.

சொற்கள்

அகல்	குத்துவிளக்கு	பெட்ரோமாக்ஸ்விளக்கு
சிம்னி	மின்சாரம்	மண்ணெண்ணெய்
லாந்தர்	குளோப்விளக்கு	விளக்கெண்ணெய்
அபிரகம்	வர்த்தி	எண்ணெய்
வெளிச்சம்	காற்று	அதிகம்

பயிற்சி

கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களைப் போட்டு எழுது.

1. அவன் வயலை ——————.
2. தச்சன் ——————ச் செய்கிறான்.
3. கொல்லன் ——————க் ——————.
4. நாங்கள் —————— வெட்டினோம்.
5. கை விளக்கு —————— செய்யப்படுகிறது.
6. சிம்னி —————— செய்யப்படுகிறது.
7. நீ —————— குடி.
8. —————— சோறு போடு.

பாடம் 10.

நாணயங்கள்

இது ஒரு தம்பிடி.
இது செம்பினால் ஆனது.

இது காலணா.
இதில் மூன்று தம்பிடிகள் உண்டு.
இதுவும் செம்பினால் ஆனது.



இது ஓர் அணா.
இதில் நான்கு கால் அணாக்கள்
அல்லது பன்னிரண்டு
தம்பிடிகள் உண்டு.
இது நிக்கலால் ஆனது.

இது அரைக்கால் ரூபாய்
அல்லது இரண்டு அணா.
இது நிக்கலால் ஆனது.



இது கால் ரூபாய் அல்லது
நான்கு அணு.

இது வெள்ளியால் ஆனது.

இது அரை ரூபாய் அல்லது
எட்டு அணுக்களின்
மதிப்பு உடையது.

இது வெள்ளியால் ஆனது.

இது ஒரு ரூபாய் அல்லது
பதினாறு அணுக்களின்
மதிப்பு உடையது.

இது வெள்ளியால் ஆனது.

இவைகள் யாவும் நாணயங்கள்.

சொற்கள்

நாணயம்	இரண்டு அணு	அரைக்கால் ரூபாய்
தம்பிடி	நான்கு அணு	கால் ரூபாய்
காலணு	எட்டு அணு	அரை ரூபாய்
ஓர் அணு	பதினாறு அணு	ஒரு ரூபாய்
செம்பு	வெள்ளி	நிக்கல்

பயிற்சி

கோடிட்ட இடங்களில் ஏற்ற பதங்களை எழுது:—

வாக்கியங்கள்	பதங்கள்
1. சேணியன் —— செய்கிறான்.	ஆணி, துணி, கோணி.
2. தையற்காரன் துணியை ——.	வெளுப்பான், அடிப்பான், தைப்பான்.
3. நான் மழையில் ——— பிடித்துக் கொள்வேன்.	செருப்பு, குடை, தடி.
4. காப்பிக்கொட்டையை —— நிறுக்கவேண்டும்.	படியில், கயிற்றில், தராசில், கோலில்.
5. கோழி விடியற் காலையில் ———.	கத்தும், ஊளையிடும், கூவும்.
6. விளக்கு எரிவதற்கு ——— ஊற்ற வேண்டும்.	பால், தயிர், எண்ணெய், காப்பி.
7. குளத்தில் ——— இருக்கும்.	நாய், பூனை, மீன், காகம்.
8. ரூபாய் —— செய்யப்பட்டது.	இரும்பால், நிக்கலால், வெள்ளியால், செம்பால்.



பாடம் 11.

நீ எங்கே போனாய்?

நான் கடைக்குப் போனேன்.

நீ எப்பொழுது போனாய்?

நான் காலையில் போனேன்.

நீ என்ன வாங்கினாய்?

நான் பலாப் பழம், வாழைப் பழங்கள் வாங்கினேன்.

எது பெரியது? பலாப் பழம் பெரியது.

எவை சிறியவை? வாழைப் பழங்கள் சிறியவை.

நீ எத்தனை வாழைப் பழம் வாங்கினாய்?

நான் இருபது வாழைப் பழங்கள் வாங்கினேன்.

நீ எவ்வளவு கொடுத்தாய்?

நான் நான்கு அணா கொடுத்தேன்.

எதிர் வார்த்தைகள்

பழம் × காய்

பெரியது × சிறியது

வாங்கினாய் × கொடுத்தாய்

பயிற்சி

கீழ் வருபவைகளைப் படி.

நீ யார்?

அது என்ன?

உன் பெயர் என்ன?

உன் வீடு எங்கே இருக்கிறது?

நீங்கள் எத்தனை பேர்கள்?

அவன் யார்?

அவை எவை?

கோடிட்ட இடங்களில் ஏற்ற வினாச்சொற்களைப் போட்டெழுது.

நீ ———— போனாய்?

நீ ———— வந்தாய்?

நீ ———— மரங்கள் பார்த்தாய்?

நீ ———— செய்தாய்?

நீங்கள் ———— வந்தீர்கள்?

உங்களுக்கு ———— வேண்டும்?

நீங்கள் ———— கொடுத்தீர்கள்?

நான்கு எருதுகள்









பயிற்சி

(1) 1. நான்கு எருதுகள் என்ன செய்கின்றன?

2. எருதுகளிடத்தில் எது வந்தது?

3. எருதுகள் என்ன செய்தன?

4. எருதுகளினிடம் கலகம் செய்தது எது?

5. நான்கு எருதுகள் எங்கெங்கு மேய்ந்தன?

6. எருதுகள் தனித்தனியாக மேயுஞ் சமயம் எது வந்தது?

7. எருதுகள் பிறகு என்ன ஆயின?

8. சிங்கம் என்ன நினைத்துக்கொண்டு போயிற்று?

9. சிங்கம் எப்போது அடிக்க முடியாமற் போயிற்று?

10. சிங்கம் எப்பொழுது அவைகளை அடித்துத் தின்றது?

(2) கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களைப் போடு.

1. சிங்கம் ———— வசிக்கும்.

2. எருது ———— வசிக்கும்.

3. பட்சி ———— வசிக்கும்.

4. மனிதன் ———— வசிப்பான்.



கோழியும் அதன் குஞ்சும்

பாடம் 12.

ஒரு குளத்தின் அருகில் ஒரு கோழி இருந்தது. அதற்கு ஒரு குஞ்சு இருந்தது.

அது, வாத்துக் குஞ்சுகள் தண்ணீரில் நீந்துவதைப் பார்த்தது.

அது தண்ணீரில் நீந்த ஆசை கொண்டது.

உடனே அது தன் தாயினிடம் ஓடிற்று.

அது "அம்மா! அம்மா! தண்ணீரில் போய் விளையாடவேண்டும்" என்று சொன்னது.

"கோழி" வேண்டாம், என்று தடுத்தது.

கோழிக் குஞ்சு கேட்காமல் குளத்தில் போய் நீந்தியது.

ஐயோ! அது மூழ்கி இறந்தது.

சொற்கள்

குளம்	தண்ணீர்	ஆசை	கோழிக் குஞ்சு
குஞ்சு	நீந்தியது	உடனே	வாத்துக் குஞ்சு

எதிர் வார்த்தைகள்

மூழ்கும் × மிதக்கும்

பயிற்சி

(1) குளத்தில் எவை இருந்தன ?

(2) வாத்துக் குஞ்சுகள் என்ன செய்துகொண்டிருந்தன ?

(3) குளத்தினருகில் எது இருந்தது ?

(4) கோழிக்குஞ்சு தன் தாயை என்ன கேட்டது ?

(5) பெட்டைக்கோழி என்ன சொல்லிற்று ?

(6) கோழிக்குஞ்சு என்ன செய்தது ?

(7) கோழிக்குஞ்சுக்கு என்ன நேரிட்டது ?

(8) நீ இதிலிருந்து தெரிந்துகொள்ளும் படிப்பினை யாது ?



பாடம் 13.

மணி : நமஸ்காரம், பள்ளிக்கூடம் வருகிறாயா?
ராதா : நமஸ்காரம். இப்போ மணி என்ன?
மணி : ஒன்பது ஆயிற்று.
ராதா : அவ்வளவு நேரம் ஆயிற்று?
மணி : ஆமாம், சீக்கிரம் வா.
ராதா : இதோ வருகிறேன், சற்று நில்.
மணி : உனக்காக நான் காத்திருக்கிறேன், வா. நேரம் ஆகிறது. சீக்கிரம் வா.
ராதா : உபாத்தியாயர் பெயர்களைப் கூப்பிட்டு விடுவார். சீக்கிரம் வா.
மணி : வந்து விட்டேன். வா போகலாம்.

சொற்கள்

நமஸ்காரம் சீக்கிரம் போகலாம் காத்திருக்கிறேன்

பாடம் 14.



ஒரு மச்சு வீடு இருந்தது.
அதில் ஒரு கறுப்பு நாய்
வளர்ந்தது.
கறுப்பு நாய் ஒரு நாள்
வெளியே வந்தது.

கறுப்பு நாய்க்கு ஒரு
எலும்பு கிடைத்தது.
வேறொரு நாய் வந்தது.
அந்த நாய் வெள்ளை
நாய்.



வெள்ளை நாய் கறுப்பு
நாயைப் பார்த்து
"எனக்கு அந்த
எலும்பைக் கொடு"
என்றது.



அது "நான் கொடுக்க
மாட்டேன், போ"
என்றது.
இரண்டு நாய்களும்
சண்டை போட்டன.



ஒரு பையன் வந்தான்.
அவன் கறுப்பு நாயை
வளர்த்தவன்.
அவன் அந்த எலும்பை
எடுத்து இரண்டு
துண்டாய்
உடைத்தான்.
அவன் கறுப்பு நாய்க்கு
ஒரு துண்டைக்
கொடுத்தான்.

அவன் வெள்ளை நாய்க்கு
ஒரு துண்டைக்
கொடுத்தான்.
கறுப்பு நாய் அந்த எலும்
புத் துண்டைக் கடித்
துத் தின்றது.
வெள்ளை நாய் அந்த
எலும்புத் துண்டைக்
கடித்துத் தின்றது.

சொற்கள்

மச்சு வீடு	கொடுக்கமாட்டேன்	வளர்த்தவன்
கறுப்பு நாய்	சண்டை	துண்டு
எலும்பு	போட்டன	உடைத்தான்

கேள்விகள்

1. கறுப்பு நாய் எங்கு வளர்ந்தது?
2. கறுப்பு நாய்க்கு என்ன கிடைத்தது?
3. வந்த நாயின் நிறம் என்ன?
4. வெள்ளை நாய் எதைக் கேட்டது?
5. கறுப்பு நாய் என்ன சொல்லிற்று?
6. இரண்டு நாய்கள் என்ன செய்தன?
7. அங்கு யார் வந்தது?
8. அவன் யார்?
9. அவன் என்ன செய்தான்?
10. அவன் எவைகளுக்குக் கொடுத்தான்?
11. அவைகள் எலும்பை என்ன செய்தன?

பாடம் 15.

உழைத்தால் உணவு



ஒரு சேவல் இருந்தது. அந்தச் சேவலுக்கு ஒரு கோதுமை கிடைத்தது. அது, "கோதுமையை விதைக்க வருவார் உண்டோ?" என்றது.

குருவி வந்து, "நான் மாட்டேன்" என்றது. நாய் வந்து, "நான் மாட்டேன்" என்றது. ஈ வந்து, "நான் மாட்டேன்" என்றது. சேவல் கோதுமையை எடுத்து, "நான் விதைப்பேன்" என்றது.



சேவல் கோதுமைப்பயிரை வளர்த்தது. அது "கோதுமையை அறுக்க வருவார் உண்டோ?" என்றது. குருவி வந்து, "நான் மாட்டேன்" என்றது. நாய் வந்து "நான் மாட்டேன்" என்றது. ஈ வந்து, "நான் மாட்டேன்" என்றது.



சேவல் "நான் அறுப்பேன்" என்றது. சேவல் "கோதுமையைச் சாப்பிட வருவார் உண்டோ?" என்று கேட்டது.



குருவி, "நான் சாப்பிட வருகிறேன்" என்றது. நாய் "நான் சாப்பிட வருகிறேன்" என்றது. ஈ "நான் சாப்பிட வருகிறேன்" என்றது.



சேவல் அவைகளைப் பார்த்து, "அது என் கோதுமை. உழைக்காமல் உணவு கிடைக்காது. உழைத்தால் உணவு கிடைக்கும்" என்று சொல்லிக் கோதுமையைத் தின்றுவிட்டது.



சேவல், 'கொக்கர கோ' என்று கூவிற்று. குருவி, நாய், ஈ, வெட்கம் அடைந்து போயின.

சொற்கள்

சேவல்	அறுக்க	கூவிற்று
கோதுமை	தின்ன	ஓடிற்று
விதை	விதைக்க	கேட்டது
உணவு	சாப்பிட	என்றது
பயிர்	மாட்டேன்	அறுப்பேன்
தின்பேன்	வருகிறேன்	விதைப்பேன்

கேள்விகள்

1. சேவல் எதைக் கண்டெடுத்தது?
2. சேவல் கோதுமையை விதைக்க யாரைக் கூப்பிட்டது?
3. கோதுமை விதைத்தது எது?
4. கோதுமையை அறுத்தது எது?
5. "நான் மாட்டேன்" என்றவை எவை?
6. "சாப்பிடுவதற்கு வருகிறேன்" என்றவை எவை?
7. யாருக்கு உணவு கிடைக்கும்?
8. யாருக்கு உணவு கிடைக்காது?
9. எவை வெட்கம் அடைந்தன?
10. அவைகள் ஏன் வெட்கம் அடைந்தன?

பயிற்சி

கீழ் வருபவைகளுக்குத் தக்க நிறத்தைப்போட்டு எழுது.

காக்கை ————.	வெள்ளை நிறம்
கிளி ————.	கறுப்பு நிறம்
கொக்கு ————.	நீல நிறம்
கரும்பலகை ————.	பச்சை நிறம்
ஆகாயம் ————.	கறுப்பு நிறம்

பாடம் 16.

சேவல் பாட்டு

பவழமணி கட்டி இன்று
பறக்க விட்ட சேவல்
பறக்க விட்ட சேவல்தனைப்
பதுங்க வைத்தவர் ஆரோ?

வெள்ளியினால் சதங்கை கட்டி
வெளியில் விட்ட சேவல்
வெளியில் விட்ட சேவல்தனை
மடக்கி வைத்தவர் ஆரோ?

பொன்னினால் சதங்கை கட்டிப்
போக விட்ட சேவல்
போக விட்ட சேவல்தனைப்
பிடித்துக் கொண்டவர் ஆரோ?

பச்சை இறக்கை பளபளெனப்
பறந்து வருஞ் சேவல்
பறந்து வருஞ் சேவல்தனைப்
பார்த்தணைத்தவர் ஆரோ?

அரசர் வீதிதனில் ஆடி வருஞ் சேவல்
ஆடிவருஞ் சேவல்தனை ஆதரித்தவர் ஆரோ?

சொற்கள்

சேவல்	பதுங்கவைத்தவள்		மடக்கிவைத்தவர்
பவழமணி	இறக்கை		பார்த்துவிட்ட
அரசர் வீதி	வெள்ளி	ஆடிவரும்	ஆதரித்தவர்

பாடம் 17.

நீ யாரைப் பார்க்கிறாய்?

நான் குரங்காட்டியைப் ____________ .

குரங்கு என்ன செய்கிறது?

குரங்கு உடுக்கையை ____________ .

ஆடு என்ன செய்கிறது?

ஆடு குரங்கின் பக்கத்தில் __________ .

பையன் என்ன செய்கிறான்?

பையன் தரையில் ____________ .



பாடம் 18.

அழுக்குப் புத்தகம்

சோமு: ராமு! உன் கதைப் புஸ்தகம் தருகிருயா? படித்து விட்டுக் கொடுக்கிறேன்.

ராமு: வா, சோமு! தருகிறேன். (ராமு புத்தகம் கொடுக்கிருன்.)

சோமு: அய்யய்யோ! புஸ்தகம் அதிக அழுக்காய் இருக்கிறதே! எப்படித் தொடுவது?

ராமு: நான் எங்கும் வைத்து விடுகிறேன். அதனுல் அழுக்காய் இருக்கிறது.

சோமு: இப்படி அழுக்காய் இருந்தால் நோய் வருமே?

ராமு: எப்படி நோய் வரும்?

சோமு: அழுக்குள்ள இடங்களில் நோய் தரும் பூச்சிகள் உண்டாகும். அதனால் நோய் வரும் என்று எங்கள் அப்பா சொன்னார். அதனால் நான் அட்டை போடுகிறேன்.

ராமு: நானும் அப்படிச் செய்கிறேன், வந்தனம்.

சோமு: வந்தனம். எனக்கு இந்தப் புஸ்தகம் வேண்டியதில்லை. வேறு புஸ்தகம் படிக்கிறேன்.

(இருவரும் பிரிந்து போகிறார்கள்.)

சொற்கள்

கதைப் புஸ்தகம்	போடு	போடுகிறேன்
அழுக்குப் புஸ்தகம்	செய்	செய்கிறேன்
பூச்சிகள்	படி	படிக்கிறேன்
அட்டை	அப்பா	தருகிறேன்
இடங்கள்	இடங்கள்	கொடுக்கிறேன்

பயிற்சி

ஏற்ற சொற்களை வைத்துப்படி.

நான்	————.	நாங்கள்	————.
நீ	————.	நீங்கள்	————.
அவன்	————.	அவர்கள்	————.
அவள்	————.	அவைகள்	————.
அது	————.		

முதற் கேள்வியைப்போல் சேர்த்து எழுதுக.

போடுகிறாய் + ஆ = போடுகிறாயா?

செய்கிறாய் + ஆ = ————?

படிக்கிறாய் + ஆ = ————?

தருகிறாய் + ஆ = ————?

கொடுக்கிறாய் + ஆ = ————?

வரும் + ஓ = வருமோ?

போகும் + ஓ = ————?

செய்யும் + ஓ = ————?

ஓடும் + ஓ = ————?

விழும் + ஓ = ————?



பாடம் 19.

அரிசியைக் குத்து முன்னே
  அரித்துக் கழுவு பின்னே
உலையில் அரிசி போடு
  உடனே மேலே மூடு
கொதித்து வெந்தபின் வடித்து,
  கொட்டி ஆற்றி எடுத்து,
கத்தரிக்காயை அரிந்து,
  காரம் புளிப்புத் தெரிந்து
உப்பு மசாலும் போட்டு
  ஒத்திருக்கக் கூட்டு
வெந்து பின்தாளித்து
  விரித்து இலையில் அழைத்து
யாவரும் கூடிப் புசிப்போம்
  இன்பமாகச் சுகிப்போம்.

பாடம் 20.

பேசக்கூடாது

பட்டு: ஏன் நீ உன் வகுப்பில் நின்றுகொண் டிருந்தாய்?

பார்வதி: நான் பேசிக்கொண் டிருந்தேன். உபாத்தி யாயினி நிற்க வைத்தார்கள்.

பட்டு: நீ ஏன் பேசவேண்டும்?

பார்வதி: லக்ஷ்மி ஒரு பொம்மை வைத்திருந்தாள். நான் அதன் விலையைக் கேட்டேன்.

பட்டு: பேசினதில் தப்பு என்ன?

பார்வதி: நாம் பேசுவதுபோல் மற்றவர்களும் பேசுவார்கள். அப்போது உபாத்தியாயினியம்மாள் சொல்வது கேட்காதல்லவா?

பட்டு: ஆம், சரி, நான் இனிச் செய்யேன்.

பார்வதி: நம் வகுப்புக்கு அல்லாமல் மற்ற வகுப்புக்கும் பாடம் கெடும்.

பட்டு: இனி நான் வகுப்பில் பேசமாட்டேன்; வந்தனம்.

சொற்கள்

பட்டு	பார்வதி	பொம்மை
உபாத்தியாயினி	மற்றவர்	கெடும்
நிற்க	நின்று	பேசமாட்டேன்

பாடம் 21.

வண்டிகள்

இது ஒரு மாட்டு வண்டி. ஒரு மாடு இதில் கட்டப்பட்டிருக்கிறது. இதற்கு ஒற்றை மாட்டு வண்டி என்பது பெயர். வண்டிக்காரன் வண்டியின்முன் உட்கார்ந்து வண்டி ஓட்டுவான். இதில் நான்கு பேர்கள் ஏறலாம்.



இது குதிரை வண்டி. இதைக் குதிரை இழுக்கும். இது மாட்டு வண்டியை விட வேகமாக ஓடும். இதிலும் நான்கு பேர்கள் உட்காரலாம்.



இது ரயில் வண்டி. இது தண்டவாளத்தின் மேல் வேகமாகப் போகும். இது நீராவியின் சக்தியால் ஓடும். பெட்டிகள் ஒன்றின்பின் ஒன்றாகக் கோக்கப்பட்டிருக்கும். இவைகளை ஓர் இன்ஜின் இழுக்கும். ஜனங்கள் ரயில் வண்டியைப் புகைவண்டி என்றும் சொல்வார்கள். நாம் ஊருக்குப் போகும்போது இந்த வண்டியில் ஏறிப் போகலாம். இதற்குத் தண்ணீரும் நிலக்கரியும் வேண்டும்.



இது ரிக்ஷா வண்டி. நாம் இதைப் பட்டணங்களில் பார்க்கலாம். இதற்கு மறைவு ஒன்று உண்டு. அதைச் சுருக்கவும் விரிக்கவும் முடியும். ரிக்ஷா வண்டிக்கு இரண்டு சக்கரங்கள் உண்டு. இதை மனிதன் இழுப்பான்.



இது மின்சார வண்டி. பலர் இதை டிராம் வண்டி என்று சொல்வார்கள். இது மின்சாரத்தினால் ஓடும். இது தண்டவாளத்தின்மேல் ஓடும். இது மின்சாரம் இல்லா இடங்களிற் போகாது. நாம் இதைப் பட்டணங்களில் பார்க்கலாம்.



இது துவிச்சக்கரவண்டி. இதில் ஒருவர் ஏறிச் சவாரி செய்யலாம். இதைக் காலினால் மிதித்துத் தள்ளவேண்டும். இதற்கு முன் கைப்பிடி உண்டு. இதை நேராகப் பிடித்துக்கொண்டு சவாரி செய்யவேண்டும். இதில் பழகினவர்களே ஏற முடியும். விரைவாகப் போக இது உதவும்.



சொற்கள்

ஒற்றை மாட்டு வண்டி
உட்கார்ந்து
வேகமாக
தண்டவாளம்
நீராவி
இன்ஜின்
புகைவண்டி
நிலக்கரி
பட்டணங்கள்
கைப்பிடி
நேராக
பழகினவர்கள்

கேள்விகள்

1. மாட்டு வண்டியில் எத்தனை பேர்கள் உட்காரலாம்?
2. நீ பிரயாணம் செய்த வண்டிகளின் பெயர்களைச் சொல்லு.
3. பட்டணத்தில் காணும் வண்டிகள் எவை?
4. கிராமங்களில் காணும் வண்டிகள் எவை?
5. டிராம் வண்டி எதனால் ஓடுகிறது?
6. தண்டவாளத்தின்மேல் ஓடும் வண்டிகள் எவை?

பயிற்சி

கோடிட்ட இடத்தில் ஏற்ற வார்த்தையைப் போட்டு எழுது.

விரைவாக, மெதுவாக, வேகமாக.

1. மாட்டு வண்டி ———— போகும்.
2. ரயில் வண்டி ———— போகும்.
3. மோட்டார் பஸ் ———— ஓடும்.
4. ஜட்கா வண்டி ———— ஓடும்.

பயிற்சி



குறிப்பு: ஒவ்வொரு படத்தைப்பற்றி ஒவ்வொரு வாக்கியம் எழுது.

பாடம் 22.

பறவைகள்

கோழி வீடுகளில் இருக்கும் பறவை. ஆண்



கோழிக்குச் சேவல் என்பது பெயர். அது அதிகாலையில் எழுந்து கூவும். அது பார்ப்ப தற்கு மிக அழகாய் இருக் கும். பெண் கோழியைப் பெட்டை என்பர். அது முட்டையிட்டுக் குஞ்சு பொரிக் கும். கோழி குப்பையைக் கிளறி நெல், புழு, பூச்சிகளைத் தின் னும். பூனையைக் கண்டால் கோழிக்குப் பயம்.

காகம் கறுப்பு நிறமுள்ள பறவை. இது காலை

யில் கரையும்; மாலையில் குளிக் கும். காக்கை பூச்சி, புழுக் களைத் தின்னும். அசுத்தங் களைத் தின்று காற்றைச் சுத்தம் செய்கிற பறவை காக்கையே. இது தன் இனத்துடன் கூடித் தின்று வாழும். இது ஒரு பக் கம் சாய்ந்து பார்க்கும் பார்வை உடையது. இது ஏமாறியிருக் குஞ் சமயம் எதையும் தூக்கிக்கொண்டு போய்த் தின்று விடும். இது மரத்தில் கூடு கட்டி வாழும்.



கிளி பச்சை நிறமுடையது. இதன் அலகு சிவப்பு நிறமுடையது. அலகு மிகவும் உறுதியாயும் வளைவாயும் இருக்கும். கிளி பழங்களைக் கொத்தித் தின்னும்; கொட்டையை உடைத்துத் தின்னும். பேசக் கற்றுக் கொடுத்தால் இது பேசும். இதன் கால்கள் குட்டையானவை. இது மூக்கினால் பற்றித் தொத்தித் தொத்தி ஏறும் பறவை. பூனையைக் கண்டால் இதற்குப் பயம். இதற்குக் கூடு கட்டத் தெரியாது. அதனால் இது மரப் பொந்துகளில் வசிக்கும்.

சொற்கள்

குப்பை	தூக்கிக்கொண்டு
புழு	தின்றுவிடும்
காற்று	உறுதியான
இனம்	கொத்தித் தின்னும்
சமயம்	கற்றுக் கொடுத்தால்
வசிக்கும்	மரப்பொந்து

எதிர் வார்த்தைகள்

சேவல் x பெட்டை

கேள்விகள்

1. சேவல் எப்பொழுது கூவும்?

2. முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பது எது?

3. காகத்தை ஆகாயத் தோட்டி என்பது சரியா?

4. கிளியின் நிறம் என்ன? கிளியின் அலகினுடைய நிறம் என்ன?

5. கூடுகட்டத் தெரியாத பறவை எது?

6. கூடுகட்டிவாழும் பறவைகள் எவை?

பாடம் 23

மரங்கள்

வாழைமரம் மிக உபயோகமான மரம். இதற்குக் கிளைகள் இல்லை. இதன் இலைகள் அகன்றும் நீண்டும் இருக்கும். வாழையிலை சாப்பிட உதவும். நாம் இதன் பூ, காய், தண்டு முதலியவைகளைக் கறி சமைத்துச் சாப்பிடலாம். இதன் கனி இனிப்பு. இதன் காய் துவர்ப்பு. இதன்கீழ், கன்றுகள் ஒன்றின்பின் ஒன்றாகத் தோன்றும். இவைகளை எடுத்து வேறு இடத்தில் வைத்து மரமாகச் செய்யலாம்.

இது தென்னை மரம். இது உயரமாய் வளரும். இதற்குக் கிளைகள் இல்லை. இதற்கு மட்டைகள் உண்டு. இதில் ஓலைகள் உண்டு. இது குலை குலையாய்க் காய்கள் காய்க்கும். இதன் இளங்காய் இளநீர் எனப்படும். இதன் முற்றின காய் தேங்காய். தேங்காயில் நார் உண்டு. நாம் நாரைக் கயிறாகத் திரிக்கலாம். தேங்காய் ஓடு அடுப்பு எரிக்கவும்,



அகப்பையாகச் செய்யவும் உதவும். நாம் ஓலையைக் கீற்றாக முடைந்து வீட்டுக்கூரை வேயலாம். தென்னை மிகவும் உபயோகமுள்ள மரம். இது மணல் பாங்கான இடத்தில் வளரும்.

மாமரம் மிகவும் உபயோகமுள்ளது. இதன் காய்கள் ஊறுகாய் போடவும் தின்னவும் பயன்படு



கின்றன. மாங்காய் புளிப்பு. மாம்பழம் இனிப்பு. நாம் மாமரத்தை அறுத்துப் பலகையாகச் செய்து வீட்டுக்கு வேண்டிய சாமான்கள் செய்யலாம். இந்துக்கள் மாவிலையைச் சுப தினங்களில் தோரணமாய்க் கட்டுவார்கள்.

சொற்கள்

கிளைகள்	ஊறுகாய்
சமைத்து	இந்துக்கள்
கூரைகள்	உபயோகம்
கீற்றுகள்	எரிக்க
மட்டைகள்	அறுத்து
மாவிலை	மணற்பாங்கான
அடுப்பு	

காய்கறி	திரிக்க	சுபதினம்	தின்ன
பலகை	சாமான்கள்	அகப்பை	நார்
வேயலாம்	கனி	தோரணம்	

எதிர் வார்த்தைகள்

நீண்ட × குட்டையான

காய் × கனி

சுபதினம் × அசுபதினம்

கோடிட்ட இடத்தில் ஏற்ற வார்த்தையைப் போட்டு எழுது.

(1) வாழைப் பழம் —— —— இருக்கும்.

—— கொத்துக் கொத்தாய், சீப்புச் சீப்பாய்.

(2) மாங்காய் —— —— இருக்கும்.

—— சீப்புச் சீப்பாய், கொத்துக் கொத்தாய்.

(3) தேங்காய் —— —— இருக்கும்.

—— குலை குலையாய், கொத்துக் கொத்தாய்.

பயிற்சி

கோடிட்ட இடத்தில் ஏற்ற வார்த்தையைப் போட்டு எழுது.

1. தென்னை மரத்தில் —— இருக்கிறது. ஓலை, இலை
2. வாழை மரத்தில் —— இருக்கிறது. ஓலை, இலை
3. பனை மரத்தில் —— இருக்கிறது. ஓலை, இலை

பாடம் 24.

வீட்டு மிருகங்கள்

பசு சாதுவானது. அது பருத்து இருக்கும். அதன் தலையில் இரண்டு கொம்புகள் உண்டு. அதற்குக் கால்கள் நான்கு உண்டு. அதன் வால் நீண்டு முனையில் அடர்ந்த மயிர் பெற்றிருக்கும். அது புல், வைக்கோல், இலை, பொட்டு முதலியவை தின்னும். அது அசைபோடும் மிருகம். அது பால் தரும். நாம் பாலிலிருந்து தயிர், மோர், வெண்ணெய், நெய் எடுக்கலாம். நாம் அதன் தோலினால் செருப்புத் தைக்கலாம். அதன் சாணம் எருவாக்கவும் வறட்டியாக்கவும் உதவும். அது மனிதர்களுக்கு மிக உபயோகமுள்ள பிராணி. பசும் பால் உடம்புக்குப் பலம் தரும்.



நாய் நல்ல அறிவு உடையது. அது தன்னை வளர்க்கும் எஜமானனிடத்து அன்பாய் இருக்கும். அது எஜமானனைக் கண்டால் வாலை ஆட்டும். அது சோறு, கறி முதலியவற்றைத் தின்னும். அது இரவில் விழித்திருந்து வீட்டைக் காவல் காக்கும். அது மனிதர்க்கு மிக்க உபயோகமுள்ள பிராணி.



குதிரை கம்பீரமான மிருகம். அது விரைவாக ஓடும். அது புல்லும் கொள்ளும் தின்னும். குதிரைக்குக் கொம்பு இல்லை. அதன் கால் மெல்லியதாயும் நீண்டும் இருக்கும். அதன் வால்மயிர் நீளம். அது தன் மேல் உட்காரும் ஈயைத் தன் வாலால் ஓட்டிக் கொள்ளும்.



நாம் அதன்மேல் ஏறிச் சவாரி செய்யலாம். அது மனிதருக்கு மிகவும் உபயோகமுள்ள பிராணி.

சொற்கள்

எரு	உடம்பு	கொள்	மோர்
சாது	அறிவு	பொட்டு	நெய்
பருத்து	எஜமானன்	அசைபோடும்	தோல்
செருப்பு	சோறு	பசும்பால்	பலம்
சாணம்	கம்பீரம்	இரவு	நீளம்
உபயோகம்	வைக்கோல்	சவாரி செய்யலாம்	காவல்
பிராணி	வெண்ணெய்	காக்கும்	

எதிர் வார்த்தைகள்

இரவு × பகல்.

பருத்து × மெலிந்து.

சாது × மூர்க்கம்.

ஏறி × இறங்கி.

கேள்விகள்

(1) பசுவின் ஆகாரம் என்ன?

(2) பசும்பாலிலிருந்து நாம் என்ன என்ன எடுக்கலாம்?

(3) குதிரையின் வால் எப்படி இருக்கும்?

(4) நாய் எஜமானனைக் கண்டால் என்ன செய்யும்?

(5) நான்கு சாதுவான மிருகங்களின் பெயர்களைச் சொல்லு.

(6) மூன்று மூர்க்கமான மிருகங்களின் பெயர்களைச் சொல்லு.

பயிற்சி

கோடிட்ட இடத்தில் ஏற்ற வார்த்தையைப் போட்டு எழுது.

1. ——— புல் மேயும்.
2. ——— கனைக்கும்.
3. ——— கதறும்.
4. ——— குலைக்கும்.



பாடம் 25.

முயற்சி இல்லா முனியன்

ஒரு வண்டிக்காரன் இருந்தான். அவன் பெயர் முனியன். ஒருநாள் அவனுடைய இரண்டு மாடு கட்டிய வண்டி உளையில் அகப்பட்டுக்கொண்டது. இரண்டு மாடுகளும் இழுத்து இழுத்துப் பார்த்தன. வண்டியோ அசையவில்லை. முனியனும் மாடுகளுக்கு உதவி செய்யவில்லை. ஆனால், அவன் கடவுளை நிந்தனை செய்தான்.

அவ்வழியில் ஒரு பெரியவர் வந்தார். அவர் முனியன் உட்கார்ந்து இருப்பதையும் மாடுகள் இழுப்பதையும் கண்டார். அவர் முனியனைப் பார்த்து, "தம்பி! மாடுகள் இழுக்க நீ உதவி செய்யாமல் இருக்கிறாயே? கடவுளை நிந்திப்பது நியாயமா? நீ ஒரு சக்கரத்தைத் தூக்கித்தள்ளு. நான் ஒரு சக்கரத்தைத் தூக்கித் தள்ளுகிறேன்" என்று சொன்னார்.



இருவரும் வண்டியின் சக்கரத்தைத் தள்ளினார்கள். மாடுகளும் வண்டியைச் சுலபமாக இழுத்தன. சேற்றில் அழுந்திய வண்டியும் மேலே கிளம்பி பாதையில் ஓடினது. முயற்சி செய்தால் முடியாத காரியம் உண்டோ ?

சொற்கள்

கடவுள்	வண்டிக்காரன்	கண்டார்
நிந்தனை	இழுத்து	தூக்கு
உளை	நிந்திப்பது	தள்ளு
பாதை	இருவரும்	சுலபம்
காரியம்	கிளம்பின	உதவி
முயற்சி	சேறு	அழுந்தி

கேள்விகள்

1. முனியன் தன் வண்டிகளை எங்கே ஓட்டினான்?
2. மாடுகள் என்ன செய்துகொண்டிருந்தன?
3. பெரியவர் முனியனிடம் என்ன சொன்னார்?
4. முயற்சி—இதை வைத்து ஒரு வாக்கியம் எழுது.

பயிற்சி

கோடிட்ட இடங்களில் ஏற்ற வார்த்தையைப் போட்டு எழுது.

(1) வண்டி —— ஓடும்.

(தரையில், தண்ணீரில்)

(2) கப்பல் —— ஓடும்.

(வானில், தரையில், கடலில்)

(3) வண்டி பள்ளத்தில் —— விட்டது.

(விழுந்து, புதைந்து, அழுந்தி)

(4) வண்டி சேற்றில் —— விட்டது.

(விழுந்து, புதைந்து, அழுந்தி)

(5) வண்டியோடு முனியன் ——.

(போனான், போயிற்று)

(6) இரண்டு மாடுகள் வண்டியை ——.

(இழுத்தது, இழுத்தன)

பாடம் 26.

முயற்சி செய்

1. முயற்சி செய் முயற்சி செய்
முடியு மட்டும் முயற்சி செய்
அயற்சி யின்றி முயற்சி செய்
அடையு மட்டும் முயற்சி செய்.

2. பல முறையும் முயற்சி செய்
பற்று வைத்து முயற்சி செய்
கலங்கிடாமல் முயற்சி செய்
கருத்து வைத்து முயற்சி செய்.

3. பொறுமையோடு முயற்சி செய்
பொய்ப்பதில்லை முயற்சி செய்
உறுதி கொண்டு முயற்சி செய்
உண்டு நன்மை முயற்சி செய்.

4. காலமறிந்து முயற்சி செய்
காண்பதுண்மை முயற்சி செய்
சீலமுடனே முயற்சி செய்
சிறப்புறுவாய் முயற்சி செய்.



பாடம் 27

திசைகள்

சூரியன் தோன்றும் திக்கு கிழக்கு.

சூரியன் மறையும் திக்கு மேற்கு.

நீ சூரியனுக்காக நின்ருல் உன் வலப் பக்கம் தெற்கு என்றும், உன் இடப்பக்கம் வடக்கு என்றும் தெரிந்து கொள்ளலாம்.

திசைகள் எத்தனை? திசைகள் நான்கு.

அவை: கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு.

சூரியனல் இரவும் பகலும் உண்டாகின்றன.

ஒரு பகலும் ஓர் இரவும் கொண்டது ஒரு நாள்.

ஏழுநாள் கொண்டது ஒரு வாரம்.

நாட்கள் ஏழு

அவை

1. ஞாயிறு,	3. செவ்வாய்,	5. வியாழன்,
2. திங்கள்,	4. புதன்,	6. வெள்ளி,

7. சனி

என்பன.

நான்கு வாரங்கள் கொண்டது ஒரு மாதம்.

பன்னிரண்டு மாதங்கள் கொண்டது ஒரு வருஷம்.

தமிழ் மாதங்கள் பன்னிரண்டு.

அவை

1. சித்திரை,	5. ஆவணி,	9. மார்கழி,
2. வைகாசி,	6. புரட்டாசி,	10. தை,
3. ஆனி,	7. ஐப்பசி,	11. மாசி,
4. ஆடி,	8. கார்த்திகை,	12. பங்குனி

என்பவை.

நாம் இப்போது உபயோகிக்கும் இங்கிலீஷ் மாதங்கள் பன்னிரண்டு.

அவை

1. ஜனவரி,	5. மே,	9. செப்டம்பர்,
2. பிப்ரவரி,	6. ஜுன்,	10. அக்டோபர்,
3. மார்ச்சு,	7. ஜுலை,	11. நவம்பர்,
4. எப்ரல்,	8. ஆகஸ்டு,	12. டிசம்பர்

என்பவை.

சொற்கள்

சூரியன்	வலம்	கிழக்கு	தெற்கு
திக்கு	இடம்	மேற்கு	வடக்கு
வருஷம்	மாதம்	நாள்	பகல்

கேள்விகள்

(1) 1. சூரியன் எத்திசையில் உதிக்கும்?

2. சூரியன் எத்திசையில் மறையும்?

3. நாள் எப்படி உண்டாகிறது?

4. ஒரு வாரத்திற்கு எத்தனை நாட்கள் உண்டு?

5. ஒரு வருஷத்திற்கு எத்தனை மாதங்கள் உண்டு?

6. ஒரு மாதத்திற்கு எத்தனை வாரங்கள் உண்டு?

7. நாம் இப்பொழுது உபயோகிக்கும் மாதங்களை எழுது.

கோடிட்ட இடங்களில் ஏற்ற வார்த்தைகளைப் போடு.

(2) 1. புதன்கிழமைக்கு முந்திய தினம் ———.

2. புதன்கிழமைக்குப் பிந்திய தினம் ———.

3. நான் நேற்று ———.

4. நான் இன்றைக்கு ———.

5. நான் நாளைக்கு ———.



பாடம் 28.

பொங்கற் பண்டிகை

"பொங்கலோ பொங்கல்"

ஒவ்வொரு வருஷமும் தை மாதம் முதல் தேதி யன்று பொங்கல் பண்டிகை வரும். பொங்கலுக்கு முந்திய தினத்தில் போகி பண்டிகை வரும். இப் பண்டிகையன்று வீட்டுக்குமுன் சிறுவர்கள் பழைய கூடைகளையும் முறங்களையும் தீயிட்டுக் கொளுத்து வார்கள். சிறு பிள்ளைகளில் சிலர் தீயின் முன் உட்கார்ந்து சிறு மேளத்தை அடிப்பார்கள். சில பிள்ளைகள் பாட்டுப் பாடிக் கூத்தும் ஆடுவார்கள். போகி பண்டிகை அதிகாலையில் நடக்கும்.

போகி பண்டிகைக்குப் பிந்தியது பொங்கல் பண்டிகை. அன்று இந்துக்கள் பானையை வைத்துப் பாலூற்றிப் பொங்கல் பொங்குவார்கள். பொங்கிய பொங்கலைப் பூசணை இலையில் வைத்துச் சூரியனுக்குப் படைப்பார்கள். அப்போது அங்குள்ள யாரும் "பொங்கலோ பொங்கல்" என்று கூவுவார்கள்.

பொங்கலுக்குப் பிந்திய நாள் மாட்டுப் பொங்கல் வரும். அன்றைய தினம் மாலையில் சிலர் மாடுகளை அலங்கரித்துத் தெருவில், "மாட்டுப் பொங்கலோ பொங்கல்" என்று கூவிக்கொண்டு மாட்டை ஓட்டிக் கொண்டு போவார்கள். மாடு விரைவாக ஓடும். பிள்ளைகள் அதற்குமுன் ஓடாமல் இருக்கவேண்டும்.

மாட்டுப் பொங்கலுக்கு மறுநாள் காணும் பொங்கல் வரும். இதைக் கன்று பொங்கல் என்றும் சிலர் கூறுவர். அன்று சிலர் வெளியே போய் வேடிக்கைப் பார்ப்பார்கள்.

சொற்கள்

போகிபண்டிகை	சிறுவர்கள்	இந்துக்கள்
ஒவ்வொரு	சிறுமேளம்	பானை
வருஷம்	தீ	பூசணை இலை
முந்தியதினம்	முறம்	அலங்கரித்து
பிந்தியதினம்	வேடிக்கை	அன்றையதினம்
அலங்கரித்து	அதற்கு	மறுநாள்
மாட்டுப் பொங்கல்	கன்று பொங்கல்	

கேள்விகள்

1. போகிப் பண்டிகை எப்போது வரும்?
2. பொங்கற் பண்டிகை எப்போது வரும்?
3. மாட்டுப் பொங்கலுக்கு முந்திய நாளில் என்ன பண்டிகை வரும்?
4. மாட்டுப் பொங்கலுக்குப் பிந்திய நாளில் என்ன பண்டிகை வரும்?

எதிர் வார்த்தைகள்

முந்தின × பிந்தின
சிறிய × பெரிய

பயிற்சி

கோடிட்ட இடங்களில் ஏற்ற வார்த்தைகளைப் போட்டு எழுது.

(1) 1. பிள்ளைகள் தப்பட்டை ________.

2. பிள்ளைகள் விளையாட்டு ________.

3. பிள்ளைகள் போகிப் பண்டிகையன்று முறமும் கூடையும் ________.

(2) துரத்துவார்கள், ஓட்டிக்கொண்டு போவார்கள்—இவைகளைத் தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.



பாடம் 29.

சீனக் கடை

(கடைக்காரன் கிலுகிலுப்பு எடுத்துக் கலகல என்று ஆட்டி, "ஐயா! வாருங்கள், வந்து பாருங்கள்" என்று கூவுகிறான்.)

மணி: அப்பா! வாருங்கள். வந்து வாங்கிக் கொடுங்கள்.

கடைக்காரன்: இது ஒன்றரை அணா. அது இரண்டரை அணா.

தந்தை: ஐயா! பந்து விலை என்ன?

கடைக்காரன்: ஐயா! பந்து விலை ஒன்றரை அணா.

மணி : அப்பா ! ஊது குழல் ஒன்று வாங்கிக் கொடுங்கள்.

தந்தை : தம்பி! ஊதுகுழலைப் பல பேர் வாயில் வைத்து ஊதியிருக்கிறார்கள். அதனால் அதை வாங்கக்கூடாது.

மணி : பளபள என்று இருக்கிற பீங்கான் பொம்மை வாங்கித் தரமாட்டீர்களா ?

தந்தை : அது வழவழ என்று இருக்கிறது. அது கையிலிருந்து நழுவி விழுந்துவிடும். அதை ஜாக்கிரதையாக வைத்திருக்க வேண்டுமே.

மணி : அப்படியே வைத்திருப்பேன், அப்பா !

தந்தை : ஐயா ! இதன் விலை என்ன ?

கடைக்காரன் : ஒன்றரை அணா.

தந்தை : சரி, கொடும். தம்பி! வாங்கிக்கொள்.

(தந்தையும் பிள்ளையும் வீட்டுக்குப் புறப்படுகிறார்கள்.)

சொற்கள்

கடைக்காரன்	கூவுகிறான்	ஒன்றரை அணா
கிலுகிலுப்பு	வாருங்கள்	இரண்டரை அணா
ஊதுகுழல்	ஊதியிருக்கிறார்கள்	புறப்படுகிறார்கள்
ஈர்க்குவி	பீங்கான் பொம்மை	விழுந்துவிடும்

பயிற்சி

(1) கீழ் வருபவைகளை உச்சரி.

வழவழ	வளவள	பலபல
மழமழ	பளபள	சிலசில
வழக்கம்	வளப்பம்	பலப்பம்

(2) கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் ஏற்றதை எடுத்துக் கோடிட்ட இடத்தில் போட்டு எழுது.

வெல்லம்	வெள்ளம்
சிறிய	பெரிய
சிறியது	பெரியது
அரை	அறை

(1) ஆற்றில் ——— ஓடுகிறது.

(2) கடையில் ——— விற்கிறார்கள்.

(3) யானை ——— மிருகம்.

(4) பூனை ——— பிராணி.

(5) என் வீட்டறை ——— .

(6) பழத்தில் ——— ப் பங்கு கொடு.

பயிற்சி

குறிப்பு: இப்படத்தைப் பார்த்து ஒரு கதை எழுது.

பொதுக் கடவுள் வணக்கம்

இம்மை எம் தலைவனாக
　இருப்பதால் தாழ்ச்சி இல்லை.

அம்மையே! அப்பா! எங்கள்
　அருங்கலை நாளும் ஓங்க,

செம்மைநல் வழியில் நின்று
　செப்பருந் தொண்டில் ஓங்க,

எம்மையா ளுடைய ஈசா!
　எமக்குநீ அருளல் வேண்டும்!



என் தாயே

(1) என்னைப் பெற்ற என்தாயே!
என்னை வளர்க்கும் என்தாயே!
உன்னை என்றும் மறவேனே!
உன்னடி என்றும் தொழுவேனே!

(2) என்னைப் பெற்ற என்தாயே!
என்னுயிர் ஈந்த என்தாயே!
உன்னை என்றும் மறவேனே!
உன்சொற் படிநான் நடப்பேனே!

(3) என்னைப் பெற்ற என்தாயே!
எனக்கே வாழும் என்தாயே!
உன்னை என்றும் மறவேனே!
உனக்குப் புகழ்வர வாழ்வேனே!



எங்கள் தோட்டம்

1. எங்கள் தோட்டம் வந்துபார்!
என்ன என்ன அழகுபார்!
தொங்கும் கொடிகள் வனப்பைப்பார்!
தொட்டாற் சிணுங்கி மதிலில்பார்!

2. மல்லிகைப் பூசிரிக் குதுபார்!
மலர்ந்த ரோஜா அழைக்குதுபார்!
வெள்ளைத் தாமரை குளத்தில்பார்!
விரும்பி இயற்கை அழகைப்பார்!

3. வண்ண வண்ணக் குரோட்டன்பார்!
வர்ண முள்ள இலைகள்பார்!
கண்ணைப் பறிக்கும் அழகைப்பார்!
கவலை எல்லாம் பறக்கும்பார்!

4. ஆல மரத்தில் பழத்தைப்பார்!
அந்தப் பழத்தின் நிறத்தைப்பார்!
கோல முடைய கிளிகள்பார்!
கொத்தித் தின்பதை மகிழ்ந்துபார்!

5. இயற்கை அழகை உற்றுப்பார்!
இன்பம் நடனம் ஆடல்பார்!
செயற்கை அழகில் என்னபார்!
தேவ தேவன் அழகைப்பார்!

சமயப் பாட்டு

1. அம்பலத் தரசே அருமருந்தே
ஆனந்தத் தேனே அருள்விருந்தே.

2. பொதுநடத் தரசே புண்ணியனே
புலவ ரெலாம்புகழ் கண்ணியனே.

3. நடராஜன் எல்லார்க்கும் நல்லவனே
நல்ல எலாம்செய வல்லவனே.

4. சங்கர சிவசிவ மாதேவா
எங்களை யாட்கொள வா, வா, வா.

ஆத்திசூடி

1. அறஞ்செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. ஈவது விலக்கேல்.
5. உடையது விளம்பேல்.
6. ஊக்கமது கைவிடேல்.
7. எண் எழுத்து இகழேல்.
8. ஏற்பது இகழ்ச்சி.
9. ஐயம் இட்டு உண்.
10. ஒப்புர ஒழுகு.
11. ஓதுவது ஒழியேல்.
12. ஔவியம் பேசேல்.

உலகநீதி

1. ஓதாமல் ஒரு நாளும்
இருக்க வேண்டாம்.

2. ஒருவரையும் பொல்லாங்கு
சொல்ல வேண்டாம்.

3. மாதாவை ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.

4. வஞ்சனைகள் செய்வாரோடு
இணங்க வேண்டாம்.

5. போகாத இடந்தனிலே
போக வேண்டாம்.

6. போகவிட்டுப் புறஞ்சொல்லித்
திரிய வேண்டாம்.

7. நெஞ்சாரப் பொய்தன்னைச்
சொல்ல வேண்டாம்.

8. நஞ்சுடனே ஒரு நாளும்
பழக வேண்டாம்.

9. அஞ்சாமல் தனிவழியே
போக வேண்டாம்.

10. அடுத்தவரை ஒரு நாளும்
கெடுக்க வேண்டாம்.

11. மனம்போன போக்கெல்லாம்
போக வேண்டாம்.

12. தருமத்தை ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.

13. குற்றம் ஒன்றும் பாராட்டித்
திரிய வேண்டாம்.

14. கற்றவரை ஒரு நாளும்
பழிக்க வேண்டாம்.

15. செய்தநன்றி ஒரு நாளும்
மறக்க வேண்டாம்.

16. புண்படவே வார்த்தைதனைச்
சொல்ல வேண்டாம்.

17. மூத்தோர்சொல் வார்த்தைதனை
மறக்க வேண்டாம்.

18. மதியாதார் தலைவாசல்
மிதிக்க வேண்டாம்.

19. எளியாரை எதிரிட்டுக்
கொள்ள வேண்டாம்.

20. இறந்தாலும் பொய்தன்னைச்
சொல்ல வேண்டாம்.

சிறியது

சிறிய சிறிய துளிகள்
சிறிய சிறிய மணல்கள்
கரிய பெரிய கடலை
அரிய நிலத்தை ஆக்கும்.

நாட்டு வாழ்த்து

என்றும் வாழ்க இந்தியா!
என்றும் வளர்க தமிழகம்!
என்றே என்றே பாடுவோம்!
என்றே என்றே பாடுவோம்!

எமது புதிய தமிழ் புத்தகங்கள்

பாரதி புதுமுறைத் தமிழ் வாசகம்

A. K. பரந்தாமனர் அவர்கள் இயற்றியது

இப் பாட புத்தகங்கள் சென்னை கல்வி இலாகா புதுத்திட்டத்தை அநுசரித்து எழுதப்பட்டுள்ளன.

பாரதி புதுமுறைத் தமிழ் வாசகம்	முதல் பாடம்	0 3 0
,,	இரண்டாம் பாடம்	0 4 0
,,	மூன்றும் பாடம்	0 5 0
,,	நான்காம் பாடம்	0 6 0
,,	ஐந்தாம் பாடம்	0 7 0

புதுமுறைச் சிவிக்ஸ்

R. சவரிமுத்து அவர்கள் இயற்றியது

புதுமுறைச் சிவிக்ஸ்	முதல் புத்தகம்	0 5 0
,,	இரண்டாம் புத்தகம்	0 6 0

நமது தாய்நாட்டுச் சரித்திரக் கதைகள்

R. ஸ்ரீநிவாசன், M. A., அவர்கள் இயற்றியது

நமது தாய்நாட்டுச் சரித்திரம்	முதற் புத்தகம்	0 4 0
,,	இரண்டாம் புத்தகம்	0 5 0
,,	மூன்றும் புத்தகம்	0 6 0

புதுமுறை பூகோள சாஸ்திரம்

N. சுப்பாராவ், B. A., L. T., அவர்கள் இயற்றியது

புதுமுறைச் சென்னை இராஜதானி பூகோளம்	0 8 0

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,

பெரம்பூர் பாரக்ஸ் ரோஸ்டு, சென்னை. | புதுமண்டபம், மதுரை. | திருநெல்வேலி, ஜங்ஷன்.